அனைத்துச் சாதியினர் அர்ச்சகர் பணியை முடக்குகிறதா த.வெ.க.?

50 ஆண்டுகால சட்டப் போராட்டத்திற்குப் பிறகு நடைமுறைக்கு வந்த அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் பணிக்கு மீண்டும் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. த.வெ.க அரசின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் இந்த வழிபாட்டு உரிமைகளில் கவனம் செலுத்தாமல், முறுக்கு பாக்கெட் காலாவதி தேதியை ஆய்வு செய்பவராக இருக்கிறார். பழநி கோயிலுக்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை மிகக் குறைந்த விலைக்குப் பத்திரவுப் பதிவு செய்த மோசடி தொடர்பாக பதற்றத்துடன் பேட்டி அளிக்கிறார். முந்தைய ஆட்சியாளர்கள் மீது பழிபோட்டுப் பேசுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார். விஜய் தலைமை யிலான த.வெ.க. ஆட்சியில் பலவற்றிலும் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது போலவே அறநிலையத் துறை சார்ந்த முடிவுகளிலும் இரட்டை நிலைப்பாடே வெளிப்பட்டு வருகிறது.

1970களின் தொடக்கத்தில் தந்தை பெரியார் அவர்கள் கோயில் கருவறைகளில் சாதியப் பாகுபாட்டை அகற்றும் வகையில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற கிளர்ச்சியை அறிவித்தார். அப்போது முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெரியாரை நேரில் சந்தித்து, "தி.மு.க.வின் கொள்கையும் சாதிய சமத்துவம்தான் என்பதால் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்குவதற்கு தி.மு.க அரசு துணை நிற்கும்" என உறுதியளித்து, பெரியாரின் கிளர்ச்சியை ஒத்திவைக்கச் செய்ததுடன், பெரியாரிடம் அளித்த உறுதிமொழியின் படி, 1971ஆம் ஆண்டு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தார்.

அர்ச்சகர் உரிமை தங்களிடமிருந்து பறிபோவதாகப் பதறிய சமூகத்தினர், இந்தச் சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றனர். சட்டத்தை ஒப்புக்கொண்ட நீதிமன்றம், ஆகம விதிகளை முன்வைத்து அதை நடைமுறைப்படுத்துவதற்குத் தடை விதித்தது. கருவறைத் தீண்டாமையை ஒழிக்க முடியவில்லையே என்று, தன் நெஞ்சில் தைத்த முள்ளுடன் 1973ல் பெரியார் மறைவெய்தினார். பின்னர், பெரியார் நூற்றாண்டை யொட்டி எம்.ஜி.ஆர். ஆட்சியில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவது குறித்து ஆராய நீதிபதி மகராசன் கமிட்டி அமைக்கப்பட்டது. ஜெயலலிதா ஆட்சியில் ஆகமப் பயிற்சி மையம் பெயரளவில் தொடங்கப்பட்டது. ஆனால், அது முழுமையும் பெறவில்லை. அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2006ஆம் ஆண்டு ஐந்தாவது முறையாக முதலமைச்சரான கலைஞர், தனது முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தி லேயே அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்தார். நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் இதற்கான குழுவும் அமைக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து மதுரை, பழநி, திருவண்ணாமலை, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் சைவ ஆகமப் பள்ளிகளும், திருவரங்கம், திருவல்லிக்கேணி ஆகிய இடங்களில் வைணவ ஆகமப் பள்ளிகளும் திறக்கப்பட்டு, அனைத்துச் சாதியைச் சேர்ந்தவர்களுக்கும் அர்ச்சகர்ப் பயிற்சியை வழங்கியது கலைஞர் அரசு.

அர்ச்சகர் சட்டம், ஆகமப் பள்ளிகள் இவற்றுக்கு எதிராகவும் வழக்குத் தொடரப் பட்டது. 2011-2021 அ.தி.மு.க ஆட்சியில் இந்த வழக்கின் மீது போதிய கவனம் செலுத்தப்படவில்லை. மாறாக, உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி இந்து சமய அறநிலையத்துறை வசம் வந்த சிதம்பரம் நடராசர் திருக்கோயிலை மீண்டும் தீட்சிதர்களிடமே ஒப்படைத்தார் ஜெயலலிதா.

2021ல் திராவிட மாடல் ஆட்சி அமைந்தது. அதன் நூறாவது நாளான 14.8.2021 அன்று மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு சொந்தமான மண்டபத்தில் நடந்த விழாவில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தின்கீழ் பணி ஆணைகளை வழங்கினார், திராவிட நாயகரான திராவிட மாடல் அரசின் முதலமைச்சர். பட்டியல் இனத்தைச் சேர்ந்த 5 பேர் உள்பட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் உள்ளிட்ட ஆகமப் பயிற்சி பெற்ற அனைத்துச் சாதியினைச் சேர்ந்தவர்களுக்கும் திராவிட மாடல் முதலமைச்சர் பணி யாணைகளை வழங்கினார். பெண் ஒதுவார்களும் நியமிக்கப்பட்ட னர். பெரியாரின் நெஞ்சில் தைக்கப்பட்ட முள், ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குப் பிறகு, திராவிட மாடல் அரசால் அகற்றப்பட்டது.



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையைப் பொறுக்க இயலாமல், ஆகமக் கோயில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதற்கு எதிராக சைவ சிவாச்சாரியார்கள் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதி மன்றமும், உச்சநீதிமன்றமும் தமிழ் நாட்டில் உள்ள ஆகமக் கோயில்களைக் கணக்கெடுக்க ஒரு கமிட்டியை அமைக்க உத்தரவிட்டன. அதன்படி நீதிபதி சொக்கலிங்கம் தலைமையில் 5 பேர் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்ட நிலையில், சொக்க லிங்கம் கமிட்டியின் கணக்கெடுப்பின்படி 7,461 ஆகமக் கோயில்கள் இருப்பதாக அறநிலையத் துறை வகைப்படுத்தி யுள்ளதாகவும், இந்தக் கணக்கெடுப்பு தவறான அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் ஓய்வு பெற்ற நீதியரசர் ஹரிபரந்தாமன், வழக்கறிஞர் வாஞ்சி நாதன் ஆகியோர் சென்னை பத்திரிகையாளர் சங்கத்தில் பேட்டி அளித்தனர். ஆகம வழக்கங்கள் இல்லாத தமிழர் களின் மரபு ரீதியான பெருங்கோயில்களையும் வகைப் படுத்த வேண்டும். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகரா வதைத் தடுக்கும் வகையில் தற்போதைய அறநிலையத் துறையின் செயல்பாடு உள்ளது. அதைக் கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

சைவ சித்தாந்தப் பெருமன்றத் தலைவர் முனைவர் நல்லூர் சரவணன் பேசும் போது, "கோயில்கள் குறித்த முறையான வரலாற்றுப் பார்வையுடன் சொக்கலிங்கம் கமிட்டி செயல்படவில்லை. கோயில்களை நேரில் சென்று பார்வையிடவுமில்லை. பல வகையான ஆகமங்கள் உள்ள நிலையில், ஒரு கோயிலில் ஒரேயொரு ஆகமம் தான் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்கிற நெறிமுறை இப்போது எந்தக் கோயிலிலும் இல்லை. சாமிக்கு கற்பூரம் காட்டிய தட்டில் தட்சணை வாங்கினாலே அந்தக் கோயிலில் ஆகமம் இல்லை என்றுதான் அர்த்தம். கணக்கெடுப்பு என்ற பெயரில் ஒரு பக்கத்திலான படிவத்தைக் கொடுத்து கோயிலில் உள்ள பரம்பரை அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் சொல்வதைக் கேட்டு ஆகமக் கோயில்கள் எனக் கணக்கிட்டுள்ளனர். அதை ஆய்வு செய்யாமல் கமிட்டி ஏற்றுக் கொண்டிருக்கிறது.

நீதிமன்ற உத்தரவை முழுமையாகச் செயல்படுத்தும் வகையில் வரலாற்றுத் துறை, சிற்பக்கலை, கல்வெட்டியல், கோயில் கட்டுமானக் கலை ஆகியவற்றில் உள்ள வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து, உண்மையான ஆகமக் கோயில்கள் எவையென்று உறுதி செய்ய வேண்டும்" என தெரிவித்தார்.

கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தின் கீழ்ப் பயிற்சியினைப் பெற்றவரும், அர்ச்சகர் பயிற்சிப் பெற்ற மாணவர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு நிய மன அர்ச்சகர்கள் சங்கத்தின் பொறுப்பாளருமான வி.அரங்கநாதன் பின்வரும் கோரிக்கைகளை த.வெ.க அரசுக்கு வைத் துள்ளார்.

உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் அமர்வு அர்ச்சகர் நியமனத்திற்கு விதித்த தடையை நீக்க உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தடையற்ற அர்ச்சகர் நியமனத் திற்கு உரிய சட்ட ஆலோசனை வழங்கிடும் வகையில், தமிழ்நாடு அரசு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள், சட்ட வல்லுநர் குழு அமைக்க வேண்டும்.

அனைத்துச் சாதிகளையும் சேர்ந்த இந்துக்களை அர்ச்சகராக நியமிப்பதற்கு சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும்.

18 ஆண்டுகளாக வேலைக்குக் காத்திருக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு - உதவித்தொகை - இழப்பீடு உள்ளிட்டவை வழங்கப் பட வேண்டும்.

தமிழ் மக்கள் கட்டிய கோயிலில் தமிழிலேயே குடமுழுக்கு நடத்தப் பட வேண்டும். இது தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு நடை முறைப்படுத்தப்பட வேண்டும். குட முழுக்கு, வேள்வி எனக் கருவறை யிலும் கோபுரத்திலும் தமிழ் ஒலிக்க ஒரு புதிய சட்டத்தை இயற்ற வேண்டும்.

-என்பது அர்ச்சகர் பயிற்சி மாணவர் சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு நியமன அர்ச்சகர்களின் கோரிக்கையாக உள்ளது.

மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நன்னீராட்டு விழாவில் நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகும் உரிய முறையில் தமிழுக்கான முன்னுரிமை அளிக்கப்பட வில்லை என்பதைச் செய்தியாளர்கள் சந்திப்பில் வழக்கறிஞர் வாஞ்சிநாதன் ஆதாரத்துடன் விளக்கினார். தமிழ்க் குடமுழுக்கினை வலியுறுத்திப் பேராடிய தெய்வத் தமிழ்ப் பேரவையினரைத் த.வெ.க அரசின் காவல்துறை கைது செய்த கொடுமும் மீனாட்சியம்மன் திருக்கோயில் குட முழுக்கின் போது நடந்தது.

த.வெ.க அரசும் அதன் அறநிலையத் துறை அமைச்சரும் அனைத்துச் சாதியினர் அர்ச்சகராவதற்குத் தடையாக இருப்பவர்களின் பக்கம் சாய்ந்து நிற்பதால், 'கொள்கைத் தலைவர் பெரியார்' என்பது த.வெ.கவின் வெறும் பசப்பு வார்த்தையாகவே உள்ளது.

அம்பலம் ஏறி அரை நூற்றாண்டு காலப் போராட்டம் மீண்டும் அந்தரத்தில் தொங்கும் நிலையில் உள்ளது. முத்ததமிழறிஞர் கலைஞரும் திராவிட நாயகர் கழகத் தலைவரும் தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றினர். விஜய்யின் த.வெ.க அரசு மீண்டும் பெரியார் நெஞ்சில் முள்ளை வைத்துத் தைக்கும் வேலையை யாருக்காகவோ செய்யப் பார்க்கிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, அக். 18-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சர், திரு மயம் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

புதுக் கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நாளை (19.10.2026-திங்கள்கிழமை)காலை 10 மணியளவில் புதுக் கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) திருமண மஹாலில் கழக விவசாய அணி செயலாளரும், முன்னாள் தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் மதுரை எஸ். பாலா ஆகியோர் தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் வரவேற்புரையிலும், முன்னாள் அமைச்சர் ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச் சுடர் கவிதைப்பித்தன், கார்த்திக் தொண்டைமான், உதயம் சண்முகம், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, முன்னாள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.



செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் வரவேற்புரை

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர ,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மட்டும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக மறுசீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறு சீரமைப்பு குறித்து,

கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழக மறுசீரமைப்பு குழு ஆலோசனைக் கூட்டம் திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் ஆகிய மூன்று தொகுதிகளில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.இராஜா மற்றும் மாநில மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் மருத்துவர் மாலதி நாராயணசாமி ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினர். இக்கூட்டங்களில் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., முன்னாள் அமைச்சர் முனைவர் கோவி.செழியன், முன்னாள் எம்.பி.சே.இராமலிங்கம், என்.ரெங்கசாமி முன்னாள் எம்.எல்.ஏ., மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர்முகமது, எஸ்.நடராஜன், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் கிளை கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஒரத்தநாடு மு.காந்தி
அக்டோபர் 18 (2020)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஒன்றிய துணைச்செயலாளர் என படிப்படியாக பொறுப்பு வகித்து 2014 முதல் தனது இறுதிகாலம் வரை ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

புதூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – ஒரத்தநாடு ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

"கொம்பு சீவி விட்ட காளை போல் சீறிப் பாய்ந்து கழகப் பணியாற்றியதால், கழகத் தொண்டர்களின் பேரன்பைப் பெற்றவராக திகழ்ந்தார்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.